RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2517

OPEN ACCESS

# திருக்குறள் களவியலில் உளவியல்

**ரா. வனிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Psychology in the field of Thirukkural

**R. Vanitha** [a, *]

[a] Department of Tamil, Sri S.R.N.M College, Sattur-626203, Tamil Nadu, India.

* Corresponding Author: Vanithar@srnmcollege.ac.in

Received: 05-11-2024
Revised: 02-01-2025
Accepted: 12-01-2025
Published: 29-01-2025

Check for updates

**ABSTRACT**

Thirukkural is one of the eighteen lesser texts. This book is suitable for all times and all people. In the third section of Thirukkural, called Inpattuppal or Kamathupal, there are twenty-five chapters called Kalaviya Kappayal. Kalaviya refers to the life before Karana. Psychology is one of the growing fields in today's world. Therefore, this book is designed to examine the psychological techniques of Kalaviya by presenting psychological theories.

**Keywords:** Thirukkural, Kalaviyal, Psychological theories, Inpattuppal

## முன்னுரை

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றும் தலைசிறந்ததுமாகும். இந்நூல் எல்லா காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தும் நூலாக விளங்குகின்றது. திருக்குறளில் இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பால் என்ற மூன்றாவது பகுப்பில் களவியல் கற்பியல் என இருபத்தைந்து அதிகாரங்களாக அமைந்துள்ளது. களவு என்பது கரணத்திற்கு முந்தைய கால வாழ்வைக் குறிப்பிடுவது ஆகும். இன்றைய உலகில் வளர்ந்து வரும் துறைகளில் உளவியல் துறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எனவே உளவியல் கோட்பாடுகளை முன்வைத்து களவியலின் உளவியல் நுட்பங்களைக் குறித்து ஆராய்வதாக இவ்இயல் அமைகின்றது.

## உளவியல் - சொல் விளக்கம்

மனித மனங்களை கற்பதற்கான மிகச் சிறந்த முயற்சிக்கு உறுதுணையாக இருப்பது உளவியல். உளவியல் குறித்து அறிஞர்கள் குறிப்பிடுகையில் “உளவியல் என்பது உள்ளத்தின் கோலங்களையும், கோணங்களையும் அதன் விளைவுகளையும் ஆராயும் ஓர் அறிவியலாகும்.” (தி.சு.நடராசன்இ திறனாய்வுக்கலை, ப.87) எனக் கூறுவர். உளவியல் என்ற சொல் ‘சைக்காலஜி’ என்ற ஆங்கிலச் சொல்லால் வழங்கப்பெறுகின்றது. இது ‘சைக்கி’ மற்றும் ‘லோகஸ்’ என்ற கிரேக்கச் சொற்களால் உருவானது ஆகும். சைக்கி என்றால் ‘ஆன்மா’ என்றும் ‘லோகஸ்’ என்றால் பொருள் என்றும் வழங்கப்பெறுகின்றது.

“சைக்காலஜி என்ற சொல்லை ‘ரூடோல்ப் ஜியோக்கல்’” (தி.கு.இரவிச்சந்திரன்இ சிக்மண்ட் பிராய்ட், உளப்பாகுப்பாய்வு அறிவியல், ப.15) என்பவர் முதன் முறையாகப் பயன்படுத்தியவர் என்று கூறுவர்.

## உள்ளத்தின் படிநிலைகள்

மனித நடத்தைகளின் மூலமாக இருப்பது மனமே ஆகும். “நன்மையை உண்டாக்குவதும்இ தீமையை உண்டாக்குவதும் மகிழ்ச்சியை உண்டாக்குவதும் செல்வத்தை உண்டாக்குவதும்இ வறுமையை உண்டாக்குவதும் எது என்றால் அது மனித மனமே” (எஸ்.ஆர்.கோவிந்தராசன்இ தாழ்வு மனப்பான்மையைத் தவிர்ப்பது எப்படி, ப.74) என்று மனத்தை வரையறுத்துக் கூறுகின்றனர். மேலும் மனமானது மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். அவை

1 மேல் மனம்
2 நடு மனம்
3 ஆழ் மனம் என வகைப்படுத்தப்படுகின்றது.

## தலைவனின் உளப்பாங்கு

அகத்திணை மாந்தர்களுள் முதன்மையான தலைமைப் பாத்திரங்கள் தலைவனும், தலைவியும் ஆவர். இத்தகைய தலைவனைக் குறிக்குமிடத்து,

“பெருமையும் உரனும் ஆடுஉ மேன” (தொல்.நூற்.1044)

ஏனச் சுட்டியுள்ளது தொல்காப்பியம். இச்சூத்திரத்தில் தொல்காப்பியர் பெருமையும் அறிவுத்திறனும் மிகுந்தவன் தலைவன் எனச் சுட்டுகிறார். அத்தகைய தலைவன் காதல் வாழ்வான களவியலில் ஐம்பத்தைந்து இடங்களில் கூற்று நிகழ்த்தவதாக அமைகிறது. களவியலில் அமைந்துள்ள 7 அதிகாரங்களிலும் தலைவனின் உணர்வுகள் வெளிப்படுகின்றன.

## தலைவியின் உளப்பாங்கு

அகத்திணை மாந்தர்களுள் தலைவனுக்கு அடுத்த நிலையில் தலைவி சுட்டப்பெறுகிறாள். இதனை,

> “அகத்திணை மாந்தர்களான தலைவன், தலைவி ஆகியோரை இணைத்து நிற்கும் பாலம் தோழி எனின்இ அத்தகைய வட்டத்திற்கு அமைந்த மையப்புள்ளி ‘தலைவி’ ஆகும்.” (இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வுஇ ப.107)

எனக் குறிப்பிடப்படுகிறது. களவியலில் தலைவி தன்னுடைய காதல் உணர்வுகளைக் குறித்து பன்னிரண்டு இடங்களில் பேசப் பெறுகின்றன. தலைவி தலைவன் மீது மிகுந்த அன்பு கொண்டவளாகக் காட்டப்படுகிறாள். களவியலில் காதல் சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், அலரறிவுரைத்தல் ஆகிய மூன்று அதிகாரங்களில் தலைவியின் மன உணர்வுகள் (உளவியல்) மிகுதியாக உள்ளன.

## ஐயம் தெளிதல்

அகத்திணை மரபுப்படி காதலில் முதல் நிகழ்ச்சி காட்சி, காட்சியில் தலைமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். காட்சிக்கு அடுத்தது உள்ளத்தெழும் ஐயம். ஐயம் என்ற மனநிகழ்ச்சி தலைவனிடம் எழுகிறது. இதனைக் களவியலில் முதல் அதிகாரமான ‘தகையணங்குறுத்தலில்’ தலைவியின் அழகைக் கண்டு காதல் கொண்ட தலைமகனின் மனத்தில் காதலெனும் உணர்வுகள் பதிவாகின்றன.

தலைவி கண்டாரை வருத்தும் தெய்வமகள் என்றும், மானுடப் பெண்தானோ? ஏன மனம் மயங்குகிறது என ஐயம் தோன்றி பின் தெளிவு ஏற்படுகிறது என்ற உணர்வுகளை,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குமழை

மாதர்கொல் மாலும் என் நெஞ்சு." (குறள். 1081)

என்ற குறளின் வாயிலாக தலைவன் ஐயுற்று தெளிவதை தகையணங்குறுத்தல் என்ற அதிகாரத்தில் அமைந்துள்ளது.

தலைவியை தெய்வமகள் என ஐயுற்று எண்ணும் நிலையியைத் தொல்காப்பியர்,

"வண்டே இழையே வள்ளி பூவே

கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று

அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ

நின்றவை களையும் கருவி என்ப" (தொல். நூற்,1041)

என்ற சூத்திரம் தலைவன் ஐயம் தெளிதல் நிலைக்கு வலுச்சேர்ப்பதாக அமைகின்றது.

## உள்ளக்குறிப்பறியும் வேட்கை

இன்பத்துப்பாலில் முதல் அதிகாரமான 'தகையணங்குறுத்தலில்' தலைவியைக் கண்டு காதல் மயக்கம் கொள்ளும் தலைவன், அடுத்து தலைவியின் உள்ளக்குறிப்பை அறிய முற்படுவதாக அமைந்துள்ளது.

பிறரது உள்ளக்குறிப்பைக் குறிப்பால் அறிதல் ஒரு சிறந்த மன ஆற்றலாகும். தலைவி ஒருபோதும் தன் காதலை வெளிப்படையாகக் கூறமாட்டாள். குறிப்பால் மட்டுமே உணர்த்துவாள்.

இதனை உணர்ந்த வள்ளுவர், தன்னுடைய உள்ளக்கருத்தைக் குறிப்பால் காட்டி ஒரு கண்ணால் சுருக்கிப் பார்த்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துபவளாக காட்டப்பெறுகின்றாள். உள்ள நெகிழ்வுகளுடன் மெல்ல நகைக்கும் தலைவியின் மெல்நகையினுள்ளும் காதற்குறிப்பானது பொதிந்து கிடப்பதை,

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்

சிறக்கணித்தாள் போல நகும்" (குறள்.1095)

"அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்

பசையினள் பைய நகும்" (குறள். 1098)

என்ற குறட்பாக்களின் வாயிலாக தலைவியின் உள்ளக்குறிப்பினை அறியும் வேட்கை புலனாகின்றன.

தலைவி தன் காதலை வெளிப்படத் தோன்றாது குறிப்பாலும் சூழலாலும் உணரச் செய்வாள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதனை,

"காமத் திணையில் கண்ணிற் வரூஉம்

நாணும் மடனும் பெண்மைய ஆதலின்

குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை

நெறிப்பட வாரா அவள் வயினான" (தொல்.நூற்.1041)

என்ற சூத்திரமும் எடுத்துரைக்கின்றது.

## புணர்ச்சி மகிழ்தலில் உளநுட்பம்

தலைவன் தலைவியிடையே உள்ளப்புணர்ச்சி உவகை நிகழ்ந்ததும் மெய்யுறு புணர்தலை விரும்புவர். மனிதனின் உளவாழ்வுக்கு பாலுணர்ச்சி ஆதாரமாக அமைகின்றது. பாலுணர்வானது மனத்தில் தோன்றக்கூடிய காம வேட்கையாகும். இவ்வுணர்வு ஒத்த அன்புடைய காதலரிடையே காணப்பெறுகின்றது.

பூச்சூடிய கூந்தலையுடைய தலைவியின் தோள்கள் விரும்பிய பொருட்களைத் தலைவனுக்கு தந்து இன்பம் தருவதை வள்ளுவர்,

"வேட்ட பொழுதின் அவையவை போலுமே

தோட்டார் கதுப்பினால் தோள்" (குறள்.1105)

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை

போழப் படாஅ முயக்கு" (குறள்.1108)

என்ற குறட்பாக்களின் வாயிலாக புணர்ச்சி மகிழ்தலில் இடம் பெறும் உளநுட்பம் புலனாகின்றன.

## நலம் பாராட்டல்

தலைவி மீது காதல் கொண்ட தலைவன் அவளின் அழகைக் குறித்த வியந்து பேசுவான். அனிச்ச மலர் அழகாக மென்மை மிகுந்து காணப்பட்டாலும் அதை விட மென்மையானவள் தலைவி என்றும், நிலா தன் காதலியின் முகத்தை ஒத்த காணப்படுவதால் பலரும் காணும் வானத்தில் தோன்றாதே என்று பாராட்டுகின்ற தலைவனின் மனம் தனக்கு மட்டும் உரிமையானவள் தலைவி என்ற உணர்வினை வெளிப்படுத்துகின்ற நிலையினை,

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்

மென்னீரள் யாம் வீழ்பவள்" (குறள்.1111)

"மலரன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின்

பலர் காணத் தோன்றல் மதி" (குறள். 1119)

என்ற குறட்பாக்களின் வாயிலாக தலைவியின் நலம் பாராட்டும் இயல்பினை அறிய முடிகிறது.

களவுக்காலத்தில் தலைவி வேப்பங்காயைக் கொடுத்தால் கூட அது வெல்லக்கட்டி போல் இனிப்பதாக பாராட்டிப் பேசும் தலைவன் பின்னாளில் பிற்றைத் தளர்ச்சி ஏற்படுவது இயல்பே என்பதை,

"வேம்பின் பைங்காயென் தோழி தரினே

தேம்பூங் கட்டி என்றனிர். இனியே" (செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும் ப.218)

என்ற பாடல் அடிகளின் மூலம் தலைவியைப் பாராட்டும் தலைவனின் மன இயல்பு களவின் போது எவ்வாறு இருந்தது என எடுத்து இயம்புகிறது.

## அன்பின் வெளிப்பாடு

அன்பு என்பது தன்னிடம் நெருங்கிப் பழகுபவரிடத்திலே உள்ள ஒரு வகையான நேசம் ஆகும். உடம்பிற்கும் உயிர்க்கும் இடையேயுள்ள நட்புறவு போல உடலின்றி உயிரில்லை, உயிரின்றி உடலுக்கு வாழ்வில்லை என்றும், கண்ணுக்குள்ளே தலைவன் இருப்பதால் சிறிதும் கூட இமைக்காமல் அவன் பால் கொண்ட அன்பே வெளிப்படுகிறது என்று வள்ளுவர் சுட்டுகிறார். இதனை,

"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு" (குறள்.1122)

என்ற குறட்பாக்களின் மூலம் உளவியலில் இடம் பெறும் அன்பின் வெளிப்பாட்டினை காதற் சிறப்புரைத்தல் அதிகாரத்தின் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

களவியலில் இடம் பெறும் உளவியல் கூறுகள் தலைமாந்தரிடம் காணப்பெறுகின்றன. களவியல் சூழலில் தலைவன், தலைவியின் உளப்பாங்கும் அவர் தம் மன உணர்வுகளையும் வள்ளுவர் இன்பத்துப்பாலில் பாங்குடன் படைத்திருப்பதை இவ்இயலின் வாயிலாக அறிய முடிகிறது.

## References

இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு.

எஸ்.ஆர்.கோவிந்தராசன், தாழ்வு மனப்பான்மையைத் தவிர்ப்பது எப்படி?

ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ச்; செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும்.

தமிழண்ணல், திருக்குறள் நுண்பொருளுரை

தமிழண்ணல், தொல்காப்பியம்.

தி.கு.ரவிச்சந்திரன், சிக்மண்ட் பிராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்.

தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License